07.02.2024 அ.வ. எண். 34/2008 பி.சா.4 சுரேஷ்

குறுக்கு விசாரணை

வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. சாட்சியம் அளிக்க என்னை பாலம்மாளும் அவருடைய மகன்களும் அழைத்தார்கள். முதல் விசாரணை உறுதிக்கூற்று நான் வந்து வழக்கறிஞரை பார்த்தபிறகு தான் தயார் செய்யப்பட்டது. என் தகப்பனார் இருக்கிறார். என் தகப்பனார் ரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். கண்ணன் என்பவர் என் தகப்பனாரின் நண்பர். கண்ணன் என்ன வேலை செய்துவந்தார் என்று தெரியாது. நான் சென்னை அண்ணாநகரில் வசித்து வருகிறேன். என் தகப்பனார் அண்ணாநகரில் வசித்து வந்தார், கண்ணன் முகப்பேரில் வசித்துவந்தார். சீனிவாசன், நரேஷ்பாபு ஆகியோர்களை எனக்கு தெரியாது. கண்ணன் என் தகப்பனாரிடம் எப்போது சொன்னார் என்று தெரியாது. ஆவணத்தில் கையெழுத்து போடவேண்டும் என்றும், சென்று கையெழுத்து போட்டுவிட்டு வருமாறு என் தகப்பனார் சொன்னார். 05.05.2014 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு சென்றேன். கண்ணனை ஏற்கனவே நான் பார்த்துள்ளேன். நான் சென்றவுடன் என்னை காத்திருக்குமாறும், சிலர் வருவதாகவும் சொன்னார் அவர்கள் பெயரை சொல்லவில்லை. மோகனம், எழிலரசன், உதயகுமார், நாகஜோதி ஆகியோர்களை எனக்கு முன்பே தெரியாது, அங்கு சென்றபிறகு தான் தெரியும். நான் பார்த்தபோது உயில் கண்ணன் கையில் தான் இருந்தது. கண்ணன் அவருடைய மனைவிக்கும், மகன்களுக்கும் உயில் எழுதிவைத்ததாக சொன்னார் எனக்கு சரியாக புரியவில்லை, கையெழுத்துபோட்டேன். சொத்து விவரம் புரியவில்லை. உயில் ஆவணத்தை அப்போது பார்த்தது தான் அதன்பிறகு பார்க்கவில்லை. தற்போது உயிலை ஒரு மாதத்திற்கு முன்பு காண்பித்தார்கள், அப்போதும் பார்த்தேன். முதலில் மோகன் என்பவர் கையெழுத்து போட்டார், அதன்பிறகு எழில், உதயகுமார் கையெழுத்து போட்டார்கள். நான் 4வதாக கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்துபோட்டு சில நாட்களில் கண்ணன் இறந்ததாக என் அப்பா சொன்னார். கண்ணன் கையெழுத்துபோட்டிருந்த வெற்றுபேப்பரை பயன்படுத்தி 2 முதல் 4 பிரதிவாதிகள் உயில்

ஆவணத்தை தயார் செய்துள்ளார்கள் என்றும், அதற்கு நான் உடந்தையாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணன் உயிருடன் இருந்தவரை உயில் ஆவணம் எழுதவில்லை என்றும், அவர் இறந்தபிறகு மோசடியாக உயில் ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் 2 முதல் 4 பிரதிவாதிகளின் குடும்ப நண்பர் என்பதால் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.